ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா ரூபா 5 தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம் மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4842

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 9—6—46 | இதழ் 7

சென்ற வாரத் தொடர்ச்சி:

## ★ ரங்கோன் ராதா! ★

சௌமியன்.

'தங்கம்கொண்டிருந்த பொறுமை ஒருபுறம் என்னைத் தாக்கிற்று என்றால், உன் அப்பா, வரவர அவளிடம் அக்கறைகாட்ட ஆரம்பித்தது வேறு என்னை வாட்டலாயிற்று. அவர் ஒருவேளை, களங்கமற்ற உள்ளத்தோடுதான் தங்கத்திடம் அக்கறை செலுத்தினாரோ என்னமோ என்று நான் சிலநாட்கள் எண்ணிக்கொண்டிருந்தேன். உண்மை அதுவல்ல, கேவலம் சுயநலத்தாலேயே அவர், அந்த அக்கறை காட்ட ஆரம்பித்தார் என்பது எனக்குப்பிறகுதெரியவந்தது. அது தெரிந்ததும், என் மனவேதனை முன்பு இருந்ததைவிடப் பன்மடங்கு அதிகமாகிவிட்டது.

ஒருநாள் நான் அவரிடம் "இதோ பாருங்கள்! இப்படி அடிக்கடி தங்கத்தைப் போய்ப் பார்ப்பதும், அடிக்கடி ஏதாவது சாமான்களை அவளுக்கு வாங்கி அனுப்புவதுமாக இருக்கவேண்டாம். ஊரிலே ஒருவிதமாக நினைக்கிறார்கள்" என்று சொன்னேன்.

"என்ன சொல்லப் போகிறார்கள். தங்கத்தை நான் கலியாணம் செய்துகொள்ளப் போவதாகப் பேசுவார்கள். வேறேஎன்ன இருக்கிறது வம்பளக்க. அப்படியே நான் தங்கத்தைக் கலியாணம் செய்துகொண்டால்தான் என்ன தவறு? தகாதா?" என்று கேட்டார். நான் என்னவென்றுபதில் கூறுவேன்! என் கண்ணீரை அவர் அன்றிரவு காணவில்லை. தலையணை தாங்கிக்கொண்டது.

தங்கம், என்னைவிட அழகுதான். இளமைவேறு அவளுக்கு மெருகிட்டு இருந்தது. நான் கொஞ்சம் சங்கோஜக்காரி. தங்கம் அப்படியல்ல. பேச்சிலேபாதிசிரிப்பாகவே இருக்கும். சிறுபெண்ணாக இருக்கும்போதே நாங்கள் அவளை அதற்காகக் கேலிசெய்வதுண்டு. ஆனால் எனக்கு அப்போதெல்லாம், அவளுடைய சிரிப்புக் கோபமூட்டியதில்லை. பெண்கள் அப்படித்தான் களங்கமற்றுக் கலகல வெனச் சிரித்துக்கொண்டிருக்கவேண்டும், சுடுமூஞ்சியாக இருக்கக்கூடாது என்று சொல்வது வழக்கம். அதே சிரிப்பு, சிலந்திக் கூடாகுமென்று நான் கண்டேனா! தங்கம், இரண்டு நிமிஷம் சேர்ந்தாப்போல ஒரே இடத்திலே பார்வையைச்செலுத்த மாட்டாள். ஏதோ சாமானைத் தவறி விட்டு விட்டுத் தேடுபவள்போல, அவளுடைய பார்வை அடிக்கொரு தடவை வெவ்வேறு பக்கம் பாயும்; கண்மட்டுந்தான்! நாங்கள் அதற்காக, "தங்கம்! உன் கண்கள் சுழல்விளக்கடி" என்று கேலிசெய்வது வழக்கம். அந்தச் சுழல் விளக்கு, ஒருபெரிய அரண்மனையிலே ஜோதியவேண்டும் என்பது தான் என் ஆசை. தங்கத்தின் ரூபலாவண்யத்துக்கு ஏற்றதாக ஓர் இடம் அமைய வேண்டும், அவள் ஆடை அணிகளுடன் அக மகிழ்ச்சியோடு வாழவேண்டும், அதைக்கண்டு களிப்பும் பெருமையும் அடையவேண்டும், என்றுதான் நான் கோன்பிருந்துவந்தேன். நடந்தது என்ன? அவள் என் சந்தோஷத்தைச் சூறையாடலானாள். என் புருஷருக்கு மனைவியாகவழி செய்து கொண்டிருந்தாள். எப்படி இருக்கும் எனக்கு!

அவளைவிட நான் அழகில் கொஞ்சம் குறைந்திருக்கலாம், ஆனால் அன்பை அவருக்கு அபிஷேகித்திருக்கிறேன்; மனம் கோணாமல் நடந்திருக்கிறேன்; அவருடைய அன்பினால் ஆனந்தமடைந்திருக்கிறேன். என் வாழ்வைக்கெடுத்து, அவள் இன்பம்பெற விரும்புவதா! இதற்கா, என் தங்கையாகப் பிறந்தாள்! மகனே! இப்படி எல்லாம் எண்ணி எண்ணி நான்ஏக்கமடைந்தேன். இடி இதோடு நிற்கவில்லை. சில நாட்களிலே, அவர் தங்கத்திடம் காட்டிய அன்பும், அவளுக்காக அல்ல, கேவலம் பணத்துக்காக என்பது தெரிந்து நான்திடுக்கிட்டுப் போனேன். வழக்கப்படி நான், அவரிடம் தங்கத்தின் தளுக்குமினுக்கு, அதனால் வரக்கூடிய கேடு ஆகியவைபற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவர், "ரங்கம்! விஷயம் தெரியாமல் உளறிக்கொண்டிராதே. சீமையிலே, உன் அப்பாவின் கேஸ் அவர் பக்கம் தீர்ப்பாகிவிட்டது. மிட்டா திரும்பக்கிடைக்கும். தங்கம் அதிலே பாதி பாகத்துக்குச் சொந்தக்காரி. அவளை இனிநீ முன்பெல்லாம் எண்ணிக்கொண்டிருந்ததுபோல நினைக்காதே" என்றார். என் அப்பாவுக்கு கேஸ் ஜெயித்ததால் இழந்த இன்பம் மீண்டும் வருவதுபற்றி, எனக்கு மகிழ்ச்சிபிறந்தது, ஆனால் அதேசமயம், தங்கத்துக்குப்பாதி மிட்டாவா இருக்கிறது என்று தெரிந்ததான் உன் அப்பா, அவளிடம் அக்கறை காட்டிவருகிறார் என்பது தெரியவே என்மனம் பதைத்தது. என்பாகமாகக் கிடைக்க இருக்கும் பாதி மிட்டா உன் அப்பாவுக்குத் திருப்தி இல்லை; அவளுக்குக் கிடைக்க இருக்கும் பாகத்தின்மீதும் அவருக்கு ஆவல்பிறந்துவிட்டது. பேராசைதானே! ஒரு பெண்ணின் கண்ணீரைச் சட்டை செய்யாத அளவு மனதைக்கல்லாக்கிக் கொண்டார், உன் அப்பா. ஊரிலே அவருக்குப்பணத்தாசையே கிடையாது என்று புகழ்.

"தங்கத்தின் சொத்து அவள் கணவனுக்குத்தான் சேரும். ஏன் பல்லிளக்கிக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை" என்று ஆரம்பித்தார்; பிறகு, தங்கத்தின் திருமண விஷயமாகப் பார்க்க வந்தாலும், ஏதாவதொரு சாக்கு, தடைகூறித் தடுத்து வரத் தொடங்கினார். அவருடைய திட்டம் எனக்கு நன்றாக விளங்கிவிட்டது. விளங்கவே என் விசாரம் அதிகரித்து, உடல் துரும்பாக இளைக்க ஆரம்பித்தது. அதுகண்டு உன் அப்பா சந்தோஷப்பட்டார். ஆமாம் கண்ணே! நான் இளைக்க ஆரம்பித்ததுகண்டு அவருக்கு உள்ளூக்குள் சந்தோஷந்தான். ஏன் தெரியுமா? இரண்டாவது தாரம் தேட, வழிகிடைத்தது!! இப்படியும் ஒரு மனப்பான்மை இருக்குமா என்று கேட்பாய். நான் இல்லாததையோ நடவாததையோ சொல்லவில்லை, உன் அப்பாவுக்கு, அதே மனநிலைதான் இருந்தது. என் உடல் உருகுவதுகண்டு தானும் உருகுபவர் போலக் காட்டிக்கொண்டார், ஆனால் அனுதாபத்துடன் அல்ல; அலுப்புடன் சலிப்புடன். உற்றார் உறவினரிடம் மெல்லக் கூறுவார், "என்னமோ போங்கள்! கடன்பட்டும் பட்டினி, கலியாணம் செய்தும் சன்யாசி என்பார்களே, அது போல இருக்கிறது என நிலைமை, கொஞ்சமும் நிம்மதி கிடையாது. வீட்டுக்குள் நுழைந்தாலே [illegible] தான். ரங்கம், ஏனோ, துரும்பு துரும்பாக இளைக்கிறாள். அவளைப் பார்க்கும் போதே வயிறு பகீர் என்கிறது" என்று பேசுவார். அவர் சொல்லிச்சொல்லி, ஏறக்குறைய ஊரிலே நமது குடும்பத்தைத் தெரிந்தவர்கள் அனைவருக்கும், நான் ஓர் நோயாளி, என்று தெரிந்துவிட்டது. ஒவ்வொருவரும் என்னைப் பார்க்கும்போதெல்லாம், "ரங்கம்! ஏனம்மா இப்படி இளைத்துக்கொண்டே போகிறாய்? என்னதான் உனக்குடம்புக்கு? அவர் பாவம் ரொம்பக் கவலைப்படுகிறார்" [illegible] கேட்பார்கள். [illegible] பேச்சைக் கேட்டுச் சகிப்பது. ஒரு தடவை இல்லாவிட்டால் இன்னொர் தடவை கோபம் [illegible] அந்தக்கோபத்திலே, "சரி! எனக்குத்தான் நோய் பிடித்துக்கொண்டது. [illegible] விட்டேன். ஏதோ என் வினை. அதற்காக அவர் ஏன் கஷ்டப்படவேண்டும். வேறு ஒருவளைக் கலியாணம்செய்து கொண்டு சுகப்படட்டுமே. நான் என்ன டோக்டரிடம் போகிறேன்; ஒரு வேலைக்காரி போட்டால் போதும். அதுவும் இல்லை என்றாலும் சரி," [illegible] வேன்; [illegible] அப்பா! என் [illegible]


[illegible]

## தமிழ்

தமிழென்றால் அமுதத்தின் ஊற்று—தமிழ்
தன்னைப்பழித்திடில் தமிழ் புயற்காற்று.
தமிழென்றால் இனிய கற்கண்டு—தமிழ்
தன்னைப்பழித்திடில் தமிழ்வெடிகுண்டு.
தமிழென்றால் மாசற்ற தங்கம்—தமிழ்
தன்னைப்பழித்திடில் தமிழ் வெறிச்சிங்கம்
தமிழென்றால் குழந்தையின் உள்ளம்—தமிழ்
தன்னைப்பழித்திடில் தமிழ் கொடும்வெள்ளம்
தமிழென்றால் அமுதத்தின் ஊற்று.................

(கம்பதாசன்)

★ "வர்ணாஸ்ரமம் ஒழிய வேண்டும்" மந்திரி கோடிரெ[illegible] ★



ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி. கும்பகோணம்.

## ரங்கோன் ராதா.

1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தப்பேச்சு, என்ன விபரீதத்தில் முடிந்தது தெரியுமோ? உடல் இளைத்ததற்கு, வைத்தியர் வரவழைக்கப்பட வேண்டியதற்குப் பதிலாக, பூஜாரிவரவழைக்கப்பட்டான்! எனக்கு நோயல்ல, பேய் பிடித்துக்கொண்டது, என்று கூறிவிட்டார் உன்தந்தை. அந்தப் பேயின் சேஷ்டையால்தான் நான் இளைத்துவிட்டேனும், முன்கோபம் கெட்ட சுபாவம் யாவும் வந்துவிட்டதாம்.

"என்எழுத்து இப்படியாகிவிட்டது என்னசெய்வது!" என்றுகண்டவர்களிடம் கூறத்தொடங்கினர். ஒவ்வொருவர் ஒவ்வொருயோசனை சொல்ல ஆரம்பித்தார்கள். தலைமுழுக்கு, கயிறுமந்திரித்துக்கட்டல், காளிக்குப்பூஜை, காத்தவராயன் கோவிலில் நோன்புஇருத்தல் இப்படிப்பலபலமுறைகள். சதாசர்வகாலமும்உடுக்கையும்பம்பையும்,நம் வீட்டிலே! பூஜாரிக்கூட்டம் வந்துபோனபடி இருக்கும். ஒருமாதத்துக்குள்,என்னைக்காணக்,குழந்தைகள் பயப்பட்டன. இளம்பெண்கள், பொழுதுபோனால் என் முகத்திலே விழிக்கமாட்டார்கள். "கூப்பிட்டுமாரங்கத்தை" என்றுகூறிக் குழந்தைகளுக்குப் பெண்கள் சோறு ஊட்ட ஆரம்பித்தார்கள். அவரேகூட, என்னிடம் ஏதோ கொஞ்சம் பயந்தவர்போல்நடந்து கொள்ளத்தொடங்கினர். இவ்வெல்லாம் வீட்டிலே, பெரிய விளக்கு இருக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துவிட்டு, எனக்குத்துணையாக ஒருவேலைக்காரியை இருக்கச் செய்துவிட்டு, அவர் தெருத்திண்ணையில் படுக்கலானர். என்னால் இந்தக் கஷ்டத்தைச் சகிக்கமுடியவில்லை, ஆகவே நான் ஆத்திரமும் அழுதாலும் கொண்டமுறையில், "வேண்டாம்! இப்படி என்னைத் துரோகம் செய்ய வேண்டாம்!" என்று அலறினேன். அந்த அலறல், ஆத்திரம், அழுதால்பாவம், அவருடைய சேஷ்டையின்விளைவு என்பதை யார் உணர்ந்தார்கள்! என்னைப் பிடித்துக்கொண்டிருக்கும் பேயின் சேஷ்டைஎன்று, கூறிவிட்டார்கள். அப்பா! அவர்களெல்லாம், பயந்ததுகூட வேடிக்கையில்லை எனக்கேகூட, கண்ணாடியில் என்முகத்தைப்பார்க்கும்போது, அச்சம்உண்டாயிற்று.என் கண்களின்ஒளி எங்கேயோபோய்விட்டது! முகம்வெளுத்துக் கிடந்தது. பேய் அறைந்தது என்பதற்கு என்னென்ன குறிகள்உண்டுஎன்று சொல்வார்களோ, அவைகள்இருக்கக்கண்டேன். அவ்வளவும், என் வாழ்விலே அவர்கலக்கிய வேதனையால் உண்டானது. ஊராரோ,அதுவெல்லாம் பேயின்சேஷ்டை என்றனர். ஒரு அண்டப்புளுகன், என்னைப்பிடித்திருப்பது ஒருபேயல்ல, மூன்றுஎன்று, கணக்கிட்டுக் கூறினான்.

"முதலியாரே! அம்மாவுக்கு இராத்திரியிலே தூக்கம் சரியாகக் கிடையாதே"

"இல்லையே! ரங்கம் சரியாகத் தூங்கி எத்தனையோ மாதங்களாகிவிட்டன".

"வராது! தூக்கம்வராது. அம்மா, அடிக்கடி காரணம் இல்லாமல் அழுவார்கள், காரணம் இல்லாமல் சிரிப்பார்கள். சரிதானுங்களா நான்சொல்வது!"

"ஆமாம்! அப்படித்தான் செய்கிறாள்"

"முன்கோபம் பிரமாதமாக இருக்கும்"

"அதை ஏன் கேட்கிறாய் போ. முன்பு எவ்வளவுக்கெவ்வளவுசாந்தமாக இருந்தாளோ அவ்வளவுக்கவ்வளவு கோபக்காரியாகிவிட்டாள்"

"ஆமாம்! எல்லாம் அந்தப்பேய்களின் வேலை. முதலியாரே! மூன்று பேய் இருக்கு அம்மாமேலே! வெள்ளிக்கிழமை குளித்துவிட்டு, மாடியிலே நின்றுகொண்டு, இருந்தார்கள், அந்தநேரத்தில் பிடித்துக் கொண்டது ஒருபேய். அதுபிறகு தனக்குச் சிநேகிதமான வேறு இரண்டு பேய்களைக்கொண்டுவந்து சேர்த்துவிட்டது"

பூஜாரிக்கும் உன்அப்பாவுக்கும் இப்படிப்பேச்சு நடக்கும்போது, என்னால் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்.

"அட, அடிமுட்டாளே! மூன்று பேயும் இல்லை, முப்பதுபேயும் இல்லையடா, அதோ உட்கார்ந்திருக்கிறதே அந்தப்பேய்தாண்டா என்னைப்பிடித்துக் கொண்டது" என்று கூறி, உன் அப்பாவைக் காட்டினேன், கோபத்துடன். அந்தப் பாதகன், ஒருபிடிவிபூதி இருக்கும், அதை எடுத்து, "ஆஹா! ஆங்காரி! ஓங்காரி!" என்று ஏதோ அர்த்தமற்றபடி கூவிக்கொண்டு என் கண்களில் தூவினான். என்கதி இப்படியும் ஆயிற்றேஎன்றுநான் கோவென்று அலறினேன். அந்த விடாகண்டன், தெருமுழுதும் என்னஎன்ன என்று வந்து கேட்கும்படியான கூச்சலிட்டு, உடுக்கையைத் தட்டினான். எதிர்விட்டார் பக்கத்துவீட்டார், உள்ளேவந்தனர். நான்வெட்கமும் துக்கமும் கொண்டவளாய், பேசாமல் கண்களைமூடிக்கொண்டு படுத்துக் கொண்டேன். "ரங்கம்! மூர்ச்சையாகி விட்டாள். பேய், மிகப்பொல்லாதது" என்று கூவினர். கண்களைத்திறந்தேன்; கோபத்துடன், எழுந்து, உள்ளேவந்திருந்தவர்களை வாயில் வந்தபடி ஏசி, அங்கேகிடந்த சாட்டையைஎடுத்து வீசிவிரட்டி அடித்தேன், ஒருபுருஷனின் போராசையினால் ஒருபெண் தன்வாழ்வின் நிம்மதியை இழந்து வேதனைப்படுகிறாள் என்பதைக் கண்டுகொள்ள முடியாத முட்டாள்கள், தங்கள் முட்டாள் தனத்தைமறைக்க, எனக்குப்பேய் பிடித்துவிட்டது என்று கூறினால் எனக்குக்கோபம் வாராதா! அந்தக் கோபத்தினால், வாயில் வந்தபடி பேசி, விரட்டினேன். அப்பா! அதனால் என்னநேரிட்டது தெரியுமா? எனக்குப் பேய்பிடித்திருக்கிறது என்பது நிச்சயப்படுத்தப்பட்டது. அதிலும், என்னைப்பிடித்திருக்கும் பேய், போக்கிரித்தனமானது, ஆபத்துத்தரக்கூடியது, சிக்கினவர்களின் உயிரைப்போக்கிவிடக் கூடியதுஎன்றுதீர்மானித்தார்கள். பூஜாரியின் யோசனையின்படி, என் கை, கால்களைப்பலமான கயிற்றினால் கட்டிப்போட்டுவிட்டார்கள். கண்ணே! என் கதியைக்கேள்! கவலையால் தாக்கப்பட்டேன். உன்அப்பாவின் சதிஎண்ணத்தைத்தெரிந்து பதைபதைத்தேன். இதைப்பேயின் சேஷ்டை என்றுகூறி, என்னை என் வீட்டிலேயே,கைதியாக்கினார்கள். எந்தவீட்டிலே நான் இன்பமாக உலவிவந்தேனோ, அதேவீட்டிலே, கைகால்கள் கட்டப்பட்டு உருட்டப்பட்டேன்! மகனே! என்னால் பொறுத்துக் கொள்ள முடியுமா? பலம்கொண்டமட்டும் கூவலானேன்! கட்டுகளை அவிழ்த்துவிடு! பாவி! படுமோசக்காரா! என்னைக் கொலையா செய்கிறாய்! என்றுகூவினேன். பேய்கூவுகிறது என்றனரேதவிர ஒருபேதை அழுகிறாள் என்றுயாரும் சொல்லவில்லை. என் கூக்குரல் வலுக்கவலுக்க, பூஜாரிகள் மாற்றிமாற்றி வரவழைக்கப்பட்டனர். கூச்சலிட்டால், பிரம்பால் அடிப்பதுஎன்ற ஏற்பாடு செய்துவிட்டான் ஒருபூஜாரி. அதனால் நான் பட்டஅடி கொஞ்சமல்ல! மனங்கொண்டமட்டும் அவரும் அடித்தார். வேப்பிலை அடிப்பதாகப் பாசாங்குசெய்துகொண்டு, வெறிக்கக்குடித்துவிட்டுவந்த பூஜாரியும் அடித்தான். அவ்வளவு அடியும் அந்தப்பொல்லாதபேய் தாங்கிக்கொள்வதாக அந்தமனித உருவில்இருந்தபேய்கள்பேசிக்கொண்டன. நான்நோய்தாளாமல் நெளிவதுகண்டு, அந்தப்பூஜாரி, "போகிறாயா! போகிறாயா! இன்னும்பூஜை தாட்டுமா?" என்றுகூவுவான். அடிதாளமாட்டாமல், ஒருநாள், நான் அவன் மேல்விழுந்து கடித்துவிட்டேன்; கடித்ததால், எனக்குக் கிடைத்த தண்டனையை இப்போது நினைத்தாலும் நடுக்கம் பிறக்கிறது; சூடு இட்டான் அந்தப்போக்கிரி. விளையாட்டுக்கு உன்அப்பா, எப்போதாவது கையைப் பிடித்துக் கொஞ்சம் பலமாக இழுத்துவிட்டால்கூட, எனக்கு இரத்தம் கட்டிக்கொள்ளும். அப்படிப் பட்ட என்உடம்பிலே அந்தப்பாவிசூடிட்டான்! அவர் அந்தக்காட்சியைக் கண்டு, தன் தலையில் அடித்துக் கொண்டார்.

என் அப்பாவும், உண்மையிலேயே என்னைப்பேய் பிடித்துக் கொண்டது என்றே நம்பினர், அவருக்குத்தெரிந்த மந்திரவாதிகள் வந்தனர். எவ்வளவு மடைத்தனம் இருக்கிறது என்பது, அந்தச்சமயத்திலே தெரிந்தது.

புதிதாக வருகிற ஒவ்வொரு பூஜாரியும், பழையபூஜாரிக்கு ஒன்றுந்தெரியாது, வெறும் உருட்டல் மிரட்டலோடு சரி, மந்திரம் தெரியாது என்று கூறாமலிருப்பதில்லை. வாரக்கணக்குவைப்பார்கள்,பிறகு மாதமாகும், அவன்போய் வேறு பூஜாரிவர. இப்படி நான் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டேன். எனக்கு இந்த அனுபவம் ஏற்படுகிறவரையிலே, நான்கூட, பேய் பிடிப்பது என்பது நிஜம், மயக்கம் வருவது, உடல் உருகுவது, கண்டபடி பேசுவது ஆடுவது இவைகளெல்லாம் பேயின் சேஷ்டை, இந்தத்தோஷம் மந்திரத்தால் போகும் என்றுதான் நம்பிக்கொண்டிருந்தேன். எனக்குப்பேய் பிடித்துவிட்டது என்று கூறப்பித்தர்கள் சித்திரவதை செய்ய ஆரம்பித்த பிறகுதான், அது அவ்வளவும் புரட்டு, அல்லது வெறும்மனமருள் என்று உணர்ந்தேன்.

உன் அப்பாஎதை உத்தேசித்து, மெள்ள மெள்ளத்தன் கள்ளத்தனத்தால் என்னை இக்கதிக்கு ஆளாக்கினரோ, அந்த உத்தேசம் ஈடேறவழி பிறந்தது. முதலிலே உற்றார் உறவினர், என்னைப்பிடித்திருக்கும் பேயைவிரட்டுவதுதான் முக்கியம் என்று எண்ணி, அதற்கான வழி கூறிவந்தனர். பேய் இருந்தால்தானே விரட்ட! பேய் போக மறுக்கிறது என்று பிறகு அவர்கள் பேசிக்கொண்டு, வேறு விஷயத்தைக் கவனிக்கலாயினர். "பாவம்! இந்தப்பேய் பிடித்தவளோடு, அவர் எப்படிக்குடித்தனம் செய்வார்? எவ்வளவு மனவேதனையாக இருக்கும் அவருக்கு!" என்று பச்சாதாபப்படவும், "என்னசெய்வது? எத்தனைகாலத்துக்கு இந்தக் கோரத்தைக்காண்பது. வேறேஒரு பெண்ணைக்கலியாணம் செய்து கொண்டால்தான் அவர் வாழ்வு கொஞ்சமாவது நிம்மதி அடையும்" என்று யோசனைகூறவும், "அவருக்குப்பெண் கொடுக்க யாருக்கு என்ன கசப்பு? யார் வேண்டுமானாலும் கொடுப்பார்கள்" என்று ஆசாவு மொழி கூறவும், "சோமசுந்தரமுதலியார் மகள் சொர்ணம் இருக்கிறாள், விஸ்வநாத முதலியார் மகள் லோகா இருக்கிறாள் என்று இடம் பார்த்துக் கூறவும், கடைசியில், "வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவானேன், என் பத்து இடம் பார்க்கவேண்டும்; ரங்கத்தின் சொந்தத் தங்கை தங்கம் இருக்கிறாள், அவளையே முடித்துவிடலாமே" என்று தூண்டவுமாயினர்.

"எதற்கு" என்பதில் துவக்கி, "அப்படித்தான்செய்யவேண்டும்" என்று முடித்தார் உன் அப்பா;

"இது என்ன பைத்யக்காரத்தனம்" என்று முதலில்பேசியவன் தந்தை, "அப்படித்தான் செய்வோம்" என்று சம்மதம் தந்தார். தங்கம் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். ஆனால் ஒரு நிபந்தனை வைத்தாள்; "நான் அத்தானைக்கலியாணம் செய்துகொண்டாலும், அப்பாவுடன்தான் இருப்பேன்" என்றாளாம். அந்தச்சாகசக்காரியின் சூது, தெரியாதவர்கள், "தம் அத்தைக்கு அப்பாவை விட்டுப்பிரிய மனமில்லை என்று சிலரும், ரங்கத்தோடு இருக்கத் தங்கம் பயப்படுகிறாள் தனையும் பேய் பிடித்துக் கொள்ளுமோ என்று பயந்து, என்று சிலரும் பேசிக்கொண்டனர். அவரை, என்னிடமிருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

தாது புஷ்டிக்கு
மஹா வீர்ய லேகியம், அயக்காந்தத்தங்க செந்தூரம்
30 வேளை: ரூபா 10—0—0
இணையற்ற மருந்துகள் என்றநர் சாட்சிகள்குவிகின்றன. உடலில் ஏற்படும் எல்லாவிதமான சோர்வுகளையும்நீக்கி நரம்புகளைமுறுக்கேற்றிவிடும். சரீரம் யௌவன தேசுடன் பிரகாசிக்கும்.
சரஸ்வதி வைத்திய சாலை,
பழனி (S. I.)

# திராவிட நாடு

காஞ்சி] 9—6—46 [ஞாயிறு

## அந்த நள்ளிரவு

★

விலைவாசி உயர்வு, காலநிலை மாறி விட்டது, வாழ்க்கைச் செலவு வளர்ந்துவிட்டது, எனவே எமது சம்பளங்களை உயர்த்திக்கொள்கிறோம் என்று தியாகத்தில் திளைத்த காங்கிரஸ் தலைவர்களே பச்சையாகத் தமது இச்சையைக்கூறிச் சம்பளத்தைப் பெருக்கிக்கொண்ட இந்நாளில், பத்து இலட்சம் பாட்டாளி மக்கள், பலகாலமாகப் பஞ்சத்தால் அடிபட்டவர்கள், உழைத்து உருமாறியவர்கள், பிரார்த்தித்துக், கெஞ்சி, மனுப்போட்டு எச்சரித்து, எம்முறையும், முதலாளித்வ முறையை மாற்றுவதற்குப் பயன்படாததுகண்டு, விளைவுகளைத் தீரயோசித்து, எதுவரினும் படுவோம்; இந்தக் காய்ந்தவயிற்றோடு நடத்தும் கடும்போர்மட்டும் இனி ஆகாது என்று துணிந்து, இந்தத் திங்கள் 27-ந்தேதி நடுநிசிக்குவேலை நிறுத்தம் செய்வதென்று தீர்மானித்துள்ளனர், பத்து இலட்சம் பாட்டாளிகள்! பரந்த இந்த உபகண்டமுழுதும்! பெஷாவரிலிருந்து பாம்பன்வரை! கல்கத்தாவிலிருந்து காரச்சிவரை! இந்தியா பூராவும்! 40000 மைல்களுக்கு மேல் உள்ள சகல இரயில் பாதைகளிலும்வேலை நிறுத்தம் நடத்தத்தீர்மானித்துவிட்டனர். தீரயோசித்த பிறகு! திரும்பத் திரும்பத் தம் குறைகளை எடுத்துக்கூறி அலுத்த பிறகு! அதிகாரிகளிடம் முறையிட்டபிறகு! பாட்டாளிகள் தமக்குள் கூடிக் கலந்து பேசியானபிறகு, இந்த முடிவுக்கு வந்தனர்.

எல்லா இடங்களிலும், ஒரே சமயத்தில், பத்து இலட்சம் பாட்டாளிகள் வேலை நிறுத்தம் நடத்துவது என்பது, இந்த உபகண்டத்து வரலாற்றிலேயே புதிது, உலக வரலாறுகளிலே காணப்படும் பல முக்கிய நிகழ்ச்சிகளிலே, இது குறிப்பிடத்தக்கது. எல்லாவிதமான ரயில்வேக்களிலும் உள்ள எல்லா வகையான தொழிலாளரும், ஜுன் 27-ந்தேதி நள்ளிரவு பிறந்ததும், வேலை நிறுத்தம் செய்யப்போவதாகக் கூறிவிட்டனர். தொழிலாளர்களிடையே 'ஓட்' எடுத்ததில் 100க்கு 94-பேருக்கு மேலாகவே, வேலை நிறுத்தம் செய்வது என்று தீர்மானித்துவிட்டனர் என்று ஏற்பட்டுவிட்டது. எனவே, இந்த வேலை நிறுத்தம், வெறும்வாடைக்காற்று, என்று அலட்சியமாக இருப்பதற்கில்லை. இது, நிச்சயமாக ஓர்புயல்! புயலை, வரவிடுவதுஆபத்து, அதனை எதிர்த்துப் பார்ப்பதோ அதை விட ஆபத்து, கொஞ்சம் பைத்யக்காரத்தனமும்கூட!

தனிப்பட்ட முதலாளிக்கும்அவரிடம் வேலை செய்யும் சில தொழிலாளருக்கும் இடையே ஏற்படும் சிறு சச்சரவு என்றால், பொது மக்கள், தமக்குள்ள வேறுபல தொல்லைகள், வேலைகள், பொறுப்புகளைக் கவனித்துக்கொண்டு இருந்துவிடலாம்—பாதகம் அதிகம் இராது. இந்த வேலை நிறுத்த விஷயமாகப் பொது மக்கள் அவ்விதம் இருக்க முடியாது—கூடாது. பொறுப்பு பொது மக்களுக்கு மிக அதிகம். இந்த வேலை நிறுத்தம், ஒரு நாட்டின் ஜீவநாடியான, போக்குவரத்துத் துறையிலே ஏற்பட இருக்கிறது, பொதுமக்களின் பிரயாணம் மட்டுமல்ல, அவர்களின் வாழ்க்கைக்கு அவசியமான உணவுப் பொருள் முதலியனவந்து சேருவதும், இதனால்பாதிக்கப்படும். அதிலும், இந்தப் பஞ்சகாலத்தில், உணவுப் பொருள் ஓரிடமிருந்து மற்றோரிடம் விரைவாகச் சென்று தீரவேண்டும், இல்லையேல்,பஞ்சம் தாக்கும்! தஞ்சாவூரில் வாகனில் ஏற்றிய அரிசியை எலிகொறித்துக் கொண்டிருக்க, அந்த அரிசி வருமென்று காத்துக் கிடக்கும் சென்னை மக்களைப் பசி அரித்துக் கொண்டிருக்கும். நீலகிரியில் ஏற்றப்பட்ட உருளைக் கிழங்கு, இடையே கிடந்து அழுகும், அதனை எதிர்பார்த்துள்ள ஊரார், பதைப்பர். விறகு இல்லை, வழியிலே, வண்டி நின்றுவிட்டதாம்! என்று இவ்விதம், ஏக்கத்தோடு மக்கள் கூறவேண்டி நேரிடும், குமுற வேண்டி நேரிடும், இந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக! வேலை நிறுத்தம், போக்குவரத்துத் துறையிலே என்றால், நடக்கட்டுமே நமக்கென்ன என்று 'கூறமுடியாது பொதுமக்களும் சரி, சர்க்காரும் சரி! அவ்வளவு பயங்கரமான நிலைமை ரயில்வே வேலை நிறுத்தம் என்பது.

பொதுமக்களுக்கு நேரிடக் கூடிய நெருக்கடிகளை நாம் கூறினது, இவ்வளவு நெருக்கடி விளையக்கூடுமாதலால், நீங்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று, பாட்டாளிகளைக்கேட்டுக் கொள்ள அல்ல! அந்தக்கட்டம் போய்விட்டது அவர்களிடம் கடுகளவு அக்கரை கொண்டவர்களும், பொதுமக்கள் கஷ்டப்படுவர் ஆகவே, வேலை நிறுத்தம் வேண்டாம் என்று கூறமுடியாது.

சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டார்கள், காத்திருக்க வேண்டிய அளவுக்குமேலாகவே அவர்கள் காத்திருந்து பார்த்தார்கள். அவர்களின் முறையீட்டைக் கவனிக்கவில்லை. நியாயமான அவர்களின் கோரிக்கைகளைக் கவனிக்கவில்லை. சமரசம்பேசினர், சாகசமே செய்தனர். ரயில்வே தொழிலாளர்களின் முக்கியமான கோரிக்கைகளைப்பற்றி விசாரிக்க ஒரு சமரசக் குழுநியமிக்கவும், ரயில்வேபோர்டு ஒப்பவில்லை! உப்புச்சப்பற்ற சில விஷயங்களை விசாரிக்கக் குழுநியமிக்க ஒப்புகின்றனர். உணவுகேட்டால் உமி தருகின்றனர்! இந்நிலையில், பொதுமக்களிடம் ரயில்வே போர்டார் பிரசாரம் செய்கின்றனர். "எவ்வளவு கஷ்டம் ஏற்படும் தெரியுமா பொதுமக்களுக்கு இந்த வேலை நிறுத்தத்தால். இவ்வளவு தொல்லைகளும் அந்தத்தொழிலாளிகள் செய்யும் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ளன. அதுவும் இந்தப் பஞ்சகாலத்திலே" என்று பேசி, மெள்ளப், பொதுமக்களுக்கு, வேலை நிறுத்தக்காரர்மீது அருவருப்புஉண்டாகும்படி செய்யலாம் என்று மனப்பால் குடிக்கிறது ரயில்வே போர்டு. பொதுமக்கள், தமக்குக் கஷ்டம் நேரிடும்போது கவலைப்படத்தான் செய்வார்கள்; ஆனால் அதற்காக அந்தக்காய்ந்த வயிற்றுக்காரர்மீது அல்ல, அவர்களை அந்நிலையில்வைத்திருக்கும்சர்க்கார் மீதே கோபம் கொள்வர்.

"அரிசி இல்லை!"

"ஏன்?"

"ரயில் வரவில்லை"

"ஏன்"

"தொழிலாளர்கள் வேலைசெய்யவில்லை"

"ஏன்"

"வேலை நிறுத்தம்!"

"ஏன்?"

"பாட்டாளிக்குக் கூலி போதவில்லை. பட்டினியுடன் போராடுகிறான். கேட்டுக் கேட்டுப்பார்த்துக்கடைசியில் வேலை செய்வதில்லை என்று தீர்மானித்துவிட்டனர்."

இந்தப் பேச்சுக்குப் பிறகு கிளம்பும் பெருமூச்சும், (கண்களில்) பொறியும், தொழிலாளரை அல்ல, துரைத்தனத்தாரைத்தான் கண்டிக்கும் அறிகுறிகளாகஇருக்கும். எனவே பொதுமக்களின்கஷ்டத்தைச் சாக்குக்காட்டி, ஏழைத் தொழிலாளர் பிரச்னையை பழுப்ப வேண்டாம்என்று எச்சரிக்கிறோம்.

தொழிலாளர்கள் கேட்பது என்ன?

1. ஆள் குறைப்புக்கூடாது.
2. தொழிலாளிக்குக் குறைந்த அளவு, 36 ரூபாய் சம்பளம்.
3. கொஞ்சம் திறமைசாலிக்கு 40 ரூபாய்.
4. அதற்கும் மேற்பட்ட திறமைசாலிக்கு 100.
5. மூன்று மாதம் போனஸ்,

என்பனபோன்றவைகளே. பாதக் கணக்கிலே, ரயில்வே தொழிலாளர் இயக்கத்தலைவர்கள், ஆதாரபூர்வமான காரணங்களைக் காட்டி இந்தக்கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர். ரயில்வேபோர்டார்,"பணத்துக்கு எங்கே போவது?" என்று கேட்டதற்கும் வழிகள் பல காட்டியுள்ளனர். வழி கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பு ஆள்பவரைச்சார்ந்தது! வழியும் இருக்கிறது. அதிகார வர்க்கத்தின் விழி, ஏழைத்தொழிலாளியின் வாழ்வு எவ்வளவு கோரமாகிவிட்டது என்பதைக் காணமுடியுமானால், வழி தானாகத்தெரியும். அதற்கான வழிகளைத்தேடாமல், வேலை நிறுத்தத்தை அடக்க, என்னென்ன 'முஸ்தீபு' செய்யலாம் என்பதிலேயா, கவலை செலுத்துவது? பொதுமக்களுக்காகப்பரிந்து பேசுபவரின் போக்கு இப்படியா இருக்கவேண்டும்?

வேண்டாம்! விபரீதம் விளையுமுன், இந்த வேலைநிறுத்தத்தைத் தவிர்க்கும் வழியில் சர்க்கார் வேலைசெய்வதேமுறை. பொதுமக்கள், இந்த நெருக்கடியைத் தாங்கும் சக்தியில் இல்லை. இது அனுவரிசிக்காலம், அதுவும், நாள்கணக்கு, வாரக்கணக்கிலே மட்டுமே நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அரிசி சேகரிக்கப் பட்டிருக்கிறது! தண்டவாளம் தரும் செய்தியைப் பொறுத்தே கோடிக்கணக்கான மக்களின் சமயலறையின் நிலை இருக்கும் நேரம். இந்தச்சமயத்திலே, போர்டார், போலிக்கௌரவம், அதிகார சுபாவம் ஆகியவைகளை விரட்டியடிக்காவிட்டால்,நாடு குழம்பும், வேண்டாம்! வேலைநிறுத்தக்காரர்களை அடக்கி விடலாம், என்ற விபரீதஎண்ணம். தவிர்க்க முனையவேண்டும்! இன்றே செய்ய வேண்டும். ரயில்வே தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானவை என்பதை நாட்டுமக்கள் நன்கு தெரிந்துகொண்டுள்ளனர்.எனவே இந்நிலையில், வேலைநிறுத்தம் செய்வோர்மீது வெறுப்பு உண்டாகச் செய்து விடலாம், பிரசாரத்தால் என்ற தப்புக்கணக்குப் போடாமல் பசியை எதிர்த்துப் போரிடும் பாட்டாளிகளின் குறைகளைத்தீர்த்துவைக்க உடனே சர்க்கார் முனைய வேண்டும். இல்லையேல், பத்து இலட்சம் பாட்டாளிகள் நடத்தும் வேலைநிறுத்தம், பரந்த இந்நிலப்பரப்பு எங்கும், பட்டினிப்பட்டாளத்தை நடமாடவைக்கும்! இலட்சம், கோடிக்கணக்காகும்! அவ்வளவு பெரும் பட்டினிப்பட்டாளத்தை,பெந்தால்துரை கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டாம்! 27-ந்தேதி நள்ளிரவு! அந்த நள்ளிரவில், நமது தோழர்கள் வேலை நிறுத்தம் செய்தே தீர வேண்டிய நிலைமைக்குவிட்டு விட்டால், நாட்டுநிலை இருள்மயமாகும் என்று அஞ்சுகிறோம். பத்துஇலட்சம் மக்களின் வாழ்வுமட்டுமல்ல, பலகோடி மக்களின் வாழ்வு, அந்த நள்ளிரவைப் பொறுத்து இருக்கிறது! அந்த நள்ளிரவுநடவடிக்கை நேரிடாதபடி, தடுக்க, அறிவுத் தெளிவுடன் உடனே ஆவனசெய்ய வேண்டும்.

---

## முக்குலத்தோர் கோரிக்கை

★

நாகை தாலுக்கா முக்குலத்தோர் சங்கத் தலைவர் தோழர் எல் ஆர். கணபதிதேவர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கைஒன்று வரப்பெற்றோம்.

தமிழரில் வீரமரபினராகவும், பழைய மண்டலங்களின் பாது காப்பாளர்களாகவும், விளங்கிவந்த முக்குலத்தோர், இன்றுள்ள நிலையைக்காண்போர் யாரும்மனங்கசியாமலிரார். அவர்கள்மீது திணிக்கப்பட்டுள்ள குற்றப் பரம்பரைச் சட்டம், ரத்து செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையை நெடுநாட்களாகப் பொது மக்களும், சகல கட்சிகளும் ஆதரித்துவந்தும் கூடச், சர்க்கார், அந்தச்சட்டத்தை ரத்து செய்யாமல் இருந்துவருகிறார்கள். முக்குலத்தோர், பொதுக் காரியங்களில் ஈடுபட்டு வீரமும், தியாகமும் விளங்கப் பணிபுரிந்திருக்கிறார்கள். அரசியல் எழுச்சியும் பெற்று இருக்கிறார்கள். எங்கும் இன எழுச்சியும், மனித சுதந்திரமும் போற்றப்பட்டுவரும் இந்நாளில், ஒரு காலத்தில் உன்னதமான நிலைமையில் வாழ்ந்துவந்த இந்த வீரமரபினரை, குற்றப்பரம்பரைச் சட்டத்திற்கு உட்படுத்துவது வீரத்தையும் மனிதத்தன்மையையும், தமிழ்ப்பண்பையும் பழிப்பதாகும். முன்பு காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றபோதே, குற்றப்பரம்பரைச் சட்டத்தை எடுக்கவேண்டுமென்ற கிளர்ச்சி இருந்தும் பயன் ஏற்படாது போயிற்று. இனியும் முக்குலத்தோரின்மனதிலே, அதிருப்தி குமுறும்படி விடுவது நல்லதல்ல. இன்றைய காங்கிரஸ் மந்திரிசபை தைரியமாக இக்காரியத்தில் ஈடுபட்டு, குற்றப்பரம்பரைச் சட்டத்தைரத்துசெய்யவேண்டும். முக்குலத்தோரில், ராஜ அந்தஸ்து படைத்தவர்களும், செல்வவான்களும், படித்தவர்களும் இருக்கிறார்கள். எனினும், இதுபோதும், முக்குலத்தோர் சார்பாகவாதாடி, சர்க்காருக்கும் பொதுமக்களுக்கும் விஷயத்தை விளக்கச் செய்யவும், முக்குலத்தோரின் முன்னேற்றத்துக்கான முறைகளை வகுக்கவும், தக்கவிதத்திலே, பணிபுரிவோருக்கு ஆதரவுதர, அவர்கள் முன்வரவில்லை ஒரு பத்திரிகை "மூவேந்தர்" என்றுநடைபெறுகிறது, அதை வளமாக நடத்தவும் முக்குலத்தவர் முனையக் காணோம். இனியேனும், சமூகப்பற்று ஓங்கிவளருமாக. சர்க்கார், குற்றப்பரம்பரைச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்யவேண்டும் என்ற கோரிக்கையை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

---

## பட்டமும்-திட்டமும்

ஏகாதிபத்யம், புதிய திட்டத்தைத் தயாரித்துவிட்டது; புன்னகை பூத்தமுகத்துடன் அதனை நாட்டிலே, நாட்டியமாடவைக்கிறது. புதிய திட்டத்தால், புதியபூசல்கள் புறப்படப்போகின்றன என்பதைப்பூலோகத்தில் "சூரியன் அஸ்தமிக்காத ராஜ்யத்தைத்" தந்திரத்தால் பெற்ற ஏகாதிபத்யம் நன்கு தெரிந்திருக்கிறது. புதிய திட்டத்தின்மூலம், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் எதிர்பார்ப்பது, இந்தியாவிலே அமைதி இருக்குமா? நீதி இருக்குமா? வர்க்கப்போராட்டம் நீங்குமா? என்பதல்ல. பலம்சேகரித்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியை எப்படியேனும் திருப்தி செய்ய முடியுமா, அந்தநிழலிலே கொஞ்சக் காலம் நிம்மதியாக வாழலாமா, என்ற ஆசைதான். ஏகாதிபத்யம், தன் பொருளாதார வாழ்வுக்குக் கேடு வராதபடியான பாதுகாப்புக்கிடைத்துவிடவேண்டுமென்பதிலேயேகண்ணுங்கருத்துமாகஇருக்கிறது, அதற்குத்தாளம்போட்டுப் பாடக்கேட்க வடநாட்டு பனியா முதலாளிகள், இருக்கிறார்கள்.

ஏகாதிபத்யத்துக்கு உள்ள எண்ணம்போலவே, வடநாட்டுபனியா முதலாளிகளுக்கும் யார் எக்கேடு கெட்டாலும் கவலையில்லை, தங்களுக்கு 'இலாபம்' வளரவேண்டும், என்பதுதான். "நாம் இருவர் சேருவோம், நாட்டை ஏமாற்றுவோம்" என்று சிந்து பாடிக்கொண்டுள்ளனர். எனவேதான், இந்தத்திட்டத்திலே, பல அடிப்படையான, பல காலமாகப் பேசப்பட்டுவந்த பிரச்னைகளைப்பற்றி, ஒன்றுமே கூறுது விடப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு முன்புவரை, நாட்டிலே பெரும்பாலானவர்களுக்குச் சீக்கியர்களின் பிரச்னை என்று ஒன்று இருப்பதாகவும் தெரியாது. ஆனால் தூதுவர்கள் தயாரித்ததிட்டத்திலே; அவர்களின் கோரிக்கை ஓரளவுக்கேனும் கவனிக்கப்பட்டிருக்கிறது. பலகாலமாகப்பேசப்பட்டு வருவதும், மேனாட்டவருக்கும் இந்நாட்டவருக்கும் நன்கு தெரிந்ததுமான, பழங்குடிமக்களைப்பற்றிய பிரச்னையை, தூதுக்கிட்டம் கவனிக்கவே இல்லை. இது எவ்வளவு அரசியல் ஞானசூனியத்தைக் காட்டுகிறது என்பதை எண்ணும்போது நகைப்பு வருகிறது, இதனால் விளையக்கூடிய கேடுகளைப்பற்றி எண்ணிப்பார்க்கும்போது,பயம்மேலிடுகிறது. பத்துக்கோடி மக்களை—அவர்கள் ஏழ்மையில் நெளிகிறார்கள்— என்ற ஒரே காரணத்துக்காக், அவர்களிடம், பிரச்சாரப் பீரங்கிகள் இல்லை என்பதற்காக, அடியோடு புறக்கணித்திருப்பது அக்ரமம். இதனைத்தான், ஜூன் 4ந்தேதி, பம்பாயில் தோழர் சிவராஜ் அவர்கள் தலைமையில் கூடிய அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பு, நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் எடுத்துக்காட்டி இருக்கிறது. திட்டம், தங்களுக்குப் பாதகமாக இருப்பதை எடுத்துக்காட்டித், தக்க சமயத்திலே, இதனைப்போக்கி தங்கள் கோரிக்கையைக் கவனித்தாக வேண்டும் என்று, கமிட்டி கூறியிருக்கிறது.

ஏகாதிபத்யத்தின் இயல்பு, நீதி நியாயம், காரணம், விளக்கம் ஆகியவைகளை எடுத்துக் காட்டினால் புரிந்துகொண்டு, நீதிவழங்க முன்வர இடந்தராது. கமிட்டியார், இதனை உத்தேசித்துத், தேவைப்பட்டால், நேரடியான போராட்டம் துவக்கவும், தயார் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தப் 'பாஷை' தான் ஏகாதிபத்யத்துக்குப் புரியக்கூடியது. ஆனால், இதனை, ராவ்பகதூர், சர், முதலிய பட்டங்களைவைத்துக் கொண்டு சொன்னால் ஏகாதிபத்யம், புன்னகை புரியும். பட்டங்களை, முதலில் காற்றில் பறக்கவிட வேண்டும். பட்டங்களைக்கொடுத்து வந்த வெள்ளையனையே, போ. வெளியே! என்று, மக்கள் கூறும் இந்த நாளிலே, ஓடப்போகிறவன் கொடுத்த பட்டத்தை ஒட்ட வைத்துக்கொண்டு, சாடப்போகிறேன், ஏகாதிபத்யத்தை என்று கூறுவது, சரியல்ல, பலனும் விளையாது. சூட்டியபட்டத்துடனேயே இருக்கவேண்டுமென்றால் சாது, சர். பி. டி. இராஜன் அவர்களைப்போல, ஒரு அரசியல் திட்டம்என்றால் அது எவ்வளவோ குறைபாடுள்ளதாகத்தான் இருக்கும், இருந்தால் என்ன, இருப்பதைக் கொண்டு திருப்தி அடையலாம், ஆகவேநான் இந்தப்பிரிட்டிஷ் திட்டத்தை வரவேற்கிறேன் என்று கூறிவிட வேண்டும் போராட்டம்—கிளர்ச்சி—என்ற பேச்சைப்பட்டத்தை ஒட்டவைத்துக்கொண்டு பேசுவது பொருத்தமாகாது. எனவே, பழங்குடிமக்களைப் புறக்கணிக்கத்துணிந்த பிரிட்டிஷ்ஏகாதிபத்யத்தைக் கண்டிக்கும்குறியாக, முதல்வேலையாக, அகில இந்திய செடியூல்டு வகுப்புத் தலைவர்கள், ஏகாதிபத்யம் சூட்டிய, பயனற்ற பட்டங்களை வெட்டி எறிந்துவிட வேண்டுகிறோம்.

## தூதுவர் திட்டத்தை லீக் ஒப்புக்கொண்டு விட்டது

6—6—46ல் டில்லியில் கூடிய அகில இந்திய முஸ்லிம் லீக் கவுன்சில் கூட்டம், பிரிட்டிஷ் மந்திரிகளால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை ஒப்புக்கொண்டு விட்டது.

லீக் கவுன்சில் கூட்டம் முடிந்து ஜனாப் ஜின்னா வெளியே வந்ததும், "நாங்கள் எங்கள் காரியத்தைச் செய்து விட்டோம். இனி என்ன நடக்கிறதென்று பார்த்துக்கொண்டிருப்போம்" என்று ஒரு நிருபரிடம் கூறினார்.

### தேனீர் விருந்து

வடசென்னை சுயமரியாதைத் தோழரும், இந்தியானுவ I. E. M E படையில்சேர்ந்து யுத்தசேவை செய்துவருபவருமான பி. வி. முத்துசாமி அவர்களுக்கு கோலாலம்பூர் பாரதிதாசன்நிதிக்கமிட்டியாரும் சுயமரியாதைத் தோழர்களும் சேர்ந்து1—5—46ல் ஈப்போரோடு,சிலாங்கூர் கிளப்பில் ஓர்சிறந்த தேனீர்விருந்தளித்தனர்.

### அனுதாபம்

வட ஆற்காடு ஜில்லா போர்டு மெம்பரும், திருவத்திபுரம் மாஜி பஞ்சாயத்து போர்டுபிரசிடெண்டும்இவ்வூர் திராவிடத் தலைவருமான தோழர் டி. எம். ஆதிகேசவலு நாயடு அவர்கள் 27-5-46ல் அகால மரணம் அடைந்ததை முன்னிட்டு இவ்வூர் பஞ்சாயத் போர்டு தங்கள் வருத்தத்தை தெரிவித்துக்கொண்டது.

## பாகவதர்-கிருஷ்ணன்

—o—

**பாகவதர்—கிருஷ்ணன் வழக்கு, பிரிவிகவுன்சிலுக்கு அப்பீலுக்கு அனுப்பப்பட்டிருந்தது. பாரிஸ்டர் K. C. ப்ரிட், ஆஜரானர். பிரிவிகவுன்சிலில் அப்பீலுக்கு அனுமதி கிடைத்துவிட்டது.**

### திருமணம்

காரையில் "திராவிட நாடு" எஜெண்டு சு.மு. உமுறுஹத்தாப்புஅவர்களின் பௌத்திரியும் வா. மூகம் மதுமரைக்காயர் அவர்களின் புதல்வி ஜுபைதாஉம்மாளுக்கும். மேற்படியூர் யா. மு. உதுமான் லெப்பை மரைக்காயர் அவர்களின் புதல்வரும் வானொளிப் பத்திரிகையின் ஆசிரியரும், முஸ்லீம் வித்தியாசங்க கலாசாலையின் ஆசிரியருமாகிய உ. மு. கியதீன் அப்துல்காதர் மரைக்காயர் அவர்களுக்கும், சென்ற 2—6—46 திங்களிரவு அதிவிமரிசையாகத்திருமணம் நடந்தேறியது.

திருவத்திபுரம் தோழர்கள் நடராசன் சரோஜினிவாழ்க்கைஒப்பந்தம் 3-6-46ல் பெரியார் தலைமையில் நடந்ததன் நினைவாகத்"திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூ. 5—0—0 தரப்பட்டது.

6—5—46ல் சென்னை பழையவண்ணாரப்பேட்டையில் தோழர்கள் குணசாகரன்—கோமளம்மாள் திருமணம் நடந்ததை முன்னிட்டுத் "திராவிடநாடு" இதழுக்கு ரூ. 2—0—0 தரப்பட்டது.

### காஞ்சிபுரத்தில் பஸ்தொழிலாளர் வேலைநிறுத்தம்

ஜூன் 27-ந்தேதியன்று, வேலைநிறுத்தம் செய்வதென்று, காஞ்சிபுரம் பஸ் தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர். அவர்களின் கோரிக்கைகள்:—

பஸ்டிரைவர்களுக்கு 57—8—0
கண்டக்டர்களுக்கு 47—8—0

ரூபாய் சம்பளமும், தினசரி பேட்டா, டிரைவர்களுக்கு 2-ரூபாயும் கண்டக்டர்களுக்கு 1—8—0-ரூபாயும்தரவேண்டும். 20-ரூபாய் அலவன்சும், இரண்டு மாதச் சம்பளம்போன்சாகவும்தரவேண்டும், என்பதாகும்.

### புரட்சிக் கவிஞர் பிறந்தினக் கொண்டாட்டம்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 56, வது ஆண்டு பிறந்தநாள்விழா 5—5—46 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சிங்கப்பூர் இராமகிருஷ்ணமடாலயத்தில் தோழர் செ. இராமலிங்கம் அவர்களின் தலைமையின்கீழ் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பல தோழர்களாலும்தோழியர்களாலும்பாக்களும்சொற்பொழிவும்நிகழ்த்தப்பட்டது


## கதிர்

ஓர் முஸ்லிம் மாத வெளியீடு
காரைக்காலிலிருந்து
விரைவில் வெளிவருகிறது

ஆசிரியர்:
ஜனாப். V. நூர்முகம்மது



### "சூருவளி"

தன்மானக்கொள்கைகளைப்பரப்பும், "சூருவளி" 25—2—46 விருந்து வீசிக்கொண்டிருக்கிறது. ஆண்டு சந்தா ரூபா 2. தனிப்பிரதி 0—2—3 ஆறுமாதச் சந்தாகிடையாது. விபரங்களுக்கு:

மானேஜர். "சூருவளி"
திருமலைராயன்பட்டினம்


## பாரதிதாசன் நிதி

கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நிதிக்காக இதுவரை சேர்ந்துள்ள தொகை:—

**ரூ. 14,662-4-0**

நிதி அளித்தவர்களின் விபரம்:—

**இசையரசு தண்டபாணி தேசிகர் ரூபா 100—0—0**

சென்னை பெரம்பூர் ஆ. டி. அரசு ரூ. 10, பெங்களூர் எஸ். அருள்தாஸ் ரூ. 5, மதுரை வி. கே. சங்கரலிங்கம் ரூ. 1, டி. கே. சிதம்பரநாத முதலியார் ரூ. 25, ஆரணி எம். பீமராசன் ரூ. 1, கோயமுத்தூர் என். அருணசலம் ரூ 5, பூனா கோ. ஏகாம்பரம் ரூ. 5, மன்னார் நாயுடு ரூ. 2. தி. சு. நாகராசன் ரூ. 1, கோபாலன் ரூ. 1, ஆதிநாராயணன் ரூ. 1, சேலம் பி. எல். இராசகோபாலன் ரூ. 2-8-0, சி. என். அருணசலம், ரூ. 1-8-0, பண்ருட்டி எம். எஸ். வி. பசுபதி ரூ. 25. தென்னூர் திராவிடர் கழகத்தார் ரூ. 5, கோபிசெட்டிபாளையம் வைரவிழா மாணவர்கள் ரூ. 20, பொன்மலை கே. சுந்தரேசன் ரூ. 2, காரைக்குடி ஆ. சொக்கலிங்கம் செட்டியார் ரூ. 10, ஆர். நாராயணசாமி ரூ.5, ராமபழனியப்பன் ரூ. 10, பி ஆர். எ. ஆர். அருணசலம் ரூ. 5, புதுக்கோட்டை மாணிக்கம் பிள்ளை ரூ 25, ந. முனியாண்டிப் பிள்ளை ரூ. 10, மா. கந்தசாமிப் பிள்ளை ரூ. 10. சி. மு. ரணபதியா பிள்ளை ரூ. 10, எஸ் லட்சுமிரதன பாரதி ரூ. 10, தோழர் எ. வெங்கட்ராமன் மூலம் மில்டரித் தோழர்கள் ரூ. 15-8-0, திருத்துறைப்பூண்டி க. தாயுமானவா ரூ. 5, சென்னை எ. முருகேசன் ரூ.5, எஸ். எஸ். எம். புருஷோத்தமன் ரூ. 5, எ. ஆர். என். காளியப்பன் ரூ. 2, பி. ஆர். ரங்கசாமி ரூ. 1, கே. ஆர். பி. இராமசாமி ரூ. 1, திருவல்லிக்கேணி டி. எஸ் ஜி. நாயுடு ரூ.2, நாகை கே. எஸ். கோவிந்தராசன் ரூ.1, சென்னை டி. ஐ. ஆர். இராவணன்மூலம் ரூ. 7, மதுரை ஜி. பால்சாமி மூலம் ரூ. 30, தென்னூர் டி. பி. வேதாச்சலம் ரூ. 25, கொழும்பு இந்தியன்பிரஸ் ரூ10 கே. சொக்கலிங்கம் ரூ. 5, எஸ். எம். வீரப்பன் ரூ. 5, இராமஜயம் கம்பெனியார் ரூ. 5; ஐ. கே. கந்தசாமி, ரூ. 5, எம். எம். எ. பிரதர்ஸ் ரூ. 5, எஸ். எஸ். சி. அண்டு எஸ். எஸ். அண்டுசன்ஸ் ரூ15 எஸ். முருகய்யன் ரூ. 10, மு. வேலாயுதம் ரூ. 5; டில்லி ந. நடராசன் ரூ15; எஸ். இராமநாதன் ரூ. 10; சேலம் பி. சொக்கநாதன் ரூ. 5, பி. சுப்ரமணியம் ரூ 5, தஞ்சாவூர் மகாலிங்கம் ரூ. 25, தூத்துக்குடி எம். கோபால்ராசன் ரூ.3 கொழும்பு எஸ். முருகய்யாமூலம் வசூலானதொகை ரூ. 15; அமிர்தசரஸ் ஆர் கே. பெருமாள் ரூ. 4; டேராடூன் கே. எஸ். கிருஷ்ணன்மூலம் ரூ. 10; சூலூர் தோழர்கள் கருப்பண்ணன் ரூ.5; பழனியப்பத்தேவர் ரூ. 5; கந்தசாமி ரூ. 5; அண்ணாமலை ரூ. 5; நாச்சிமுத்துத்தேவர் ரூ. 5; இராமசாமித்தேவர் ரூ. 5; நாகப்பத்தேவர் நூ. 3; திருவேங்கிடம் நூ. 3: கணபதி பண்டாரம் நூ. 2: பழனிசாமி நூ. 2: நாச்சிமுத்த நூ. 2: நஞ்சப்பத்தேவர் நூ. 2: அங்கத்தேவர் நூ. 2: அற்புதசாமி நூ. 2: கிருஷ்ணசாமி நூ. 2: அருணசலம் நூ. 2: கருப்பண்ணன் நூ. 2: பழனியப்பசெட்டி நூ. 2: வேலப்பத்தேவர் நூ. 2: கருப்பண்ணன் நூ. 2: ரங்கசாமி நூ. 2: ஆறுமுகம் நூ. 1: ரங்கசாமி நூ. 1: கமலம் நூ. 1: மாகதம் நூ. 1: நாச்சிமுத்து நூ. 1: வெங்கிடாசலம் நூ. 1: பேச்சிமுத்து நூ. 1: ராஜா நூ. 1: முனியம்மாள் நூ. 1: கமலவேணி நூ. 1: வெங்கட்ரமத்தேவர் நூ. 1: இராமசாமி நூ. 1: நடராசன் 1: மருதாசலம் 1; வெங்கிடாசலம் 1, ரங்கசாமி நூ. 1. கிருஷ்ணட்பன் நூ. 1. சுப்பிரமண்யன் நூ. 1. பெருமாள்நாயகர் நூ. 1. ஆறுமுகப் பிள்ளை நூ. 1. கருப்பண்ணன் 1: கிருஷ்ணசெட்டியார் 1: பக்கிரிசாமி 1: ரணிசாமி 1: ரத்தினம் 1: பழனியப்ப செட்டியார் 1: ஆறுமுகம் 1: குப்பண்ணன் 1: அருணசலம் 1: சுந்தரத்தேவர் 8: அணா செல்லப்பன் 8, அணா.

[இரண்டு உரையாடல்கள், வெவ்வேறு சமயத்தில். முதலாவது காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபோது, இருவருக்குள் நடந்த உரையாடல்.

இரண்டாவது, அதே ஆசாமிகள், ஆட்சி நடைமுறையின் போது பேசுவது]

## மகுடாபிஷேக தினம்

"என்னப்பா ஊரிலே விசேஷம்? ஒரே பரபரப்பாக இருக்கிறதே!"

"இன்று மகுடாபிஷேகம்! புதிய ராஜா பட்டத்துக்கு வருகிறார்"

"சரி! புதிய ராஜா, தனக்குப் பட்டம் கிடைப்பதற்காக மகிழ்ச்சி கொள்ளவேண்டியது முறைதான். உன் மகிழ்ச்சிக்கு என்ன காரணம்? ஊர் மகிழ்ச்சிக்கு என்ன காரணம்?"

"யாரடா இவன், பைத்யக்காரன்! பழைய ராஜா, படுத்திய பாடு உனக்கென்ன தெரியும். அந்தக் கஷ்டம் ஒழிந்து இப்போது தான், புது ராஜா வருகிறார், இனிப் பழைய கஷ்டம் இராது!"

"ஓஹோ! அதைச் சொல்லப்பா. அதுதானே முக்கியம். ஊரை வாட்டி வந்த கஷ்டம் ஒழிகிறது என்று சொல். ராஜா மாறினாலும் மாறாவிட்டாலும், ராஜீகம், கஷ்டந்தருவதற்குப் பதிலாகச் சுகம் தரும் என்றால் ஆனந்தப்படவேண்டியதுதான்"

"அதைத்தான் சொன்னேன் புது ராஜா வருகிறார் என்று. ஊராரின் மகிழ்ச்சிக்கு அதுதான் காரணம்."

"சரியப்பா! உன் மகிழ்ச்சி நிலைக்கட்டும், நீடிக்கட்டும், வளரட்டும். ஆமாம்! பழைய ராஜா ரொம்பத் தொல்லை கொடுத்தாரோ?"

"அதை ஏன் கேட்கிறாய்! கஷ்டமயம். ஆளுகையின் முறை அவர் இஷ்டப்படிதான்."

"விளங்கச் சொல்லப்பா, என்னென்ன விதமான கஷ்டம்"

"எதைச் சொல்வது எதைச் சொல்லாமல் விடுவது! அரிசிகூட அளந்து கொடுத்தார்கள். எதற்கு எடுத்தாலும் பஞ்சம். ஏழை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் போதாது; கேட்டாலோ சிறுவர் மன்னர் கூலி போதவில்லை என்று பாட்டாளி கேட்டால், குண்டாந்தடிதான் பதில் கூறவரும்."

"அடடா! அவ்வளவு அலட்சியமாகவா இருந்தார் பழைய ராஜா. ஊரிலே மக்கள் கிளர்ச்சி செய்யவில்லையோ?"

"நல்ல கேள்வி கேட்டாய் போ! கிளர்ச்சி செய்தால் சிறைவாசம். கூட்டம் போடுவதென்றால், தடை உத்தரவு வரும். வேலை நிறுத்தம் செய்தால், கைது செய்வார்கள்."

"அப்படியா விஷயம்! ஏழைகள் ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பார்கள், பாபம்!"

"ஆமாம், சொல்லமுடியாத கஷ்டம். கொள்ளை இலாபக்காரர்கள் வேறு, ஏழைகளைக் கொட்டுந் தேளானார்கள். பண்டங்களைப் பதுக்கிவைத்துக்கொண்டு சிலர் பொது மக்களைப் பாம்பெனக் கடித்தார்கள்"

"கேட்கும்போதே துக்கமாக இருக்கிறதப்பா. ஏதோ, இனித்தான் அந்தக் கஷ்டம் இராது என்கிறாயே. புது ராஜா வருகிறார், கஷ்டம் தீரும், சுகம் பிறக்கும் என்கிறாயே. ஏதோ சுகப்படு. நான் போய் வருகிறேன்"

காமிராவுக்குத் தப்பிய காட்சிகள்.

# "நடந்ததுதான், நடக்கிறது!"

புதுராஜாங்கம் நடக்கும் நாட்கள். அதே ஆசாமிகள் இருவரும் மறுபடியும் சந்திக்கின்றனர்.

"பார்த்த முகமாக இருக்கிறதே! ஓ! கவனம் வருகிறது. நீதானே அப்பா, மகுடாபிஷேக வைபவத்தை எனக்குச் சொன்ன ஆசாமி"

"ஆமாம் நானேதான்"

"புது ராஜா..............."

"சௌக்கியமாக இருக்கிறார்....!"

"ராஜாக்கள் சௌக்கியமாகத் தானே இருப்பார்கள். அதைக் கேட்கவில்லையப்பா. புது ராஜா வந்த பிறகு, ராஜீகம் சுகமாக இருக்கிறதல்லவா என்று கேட்டேன்"

"ஆஹா! ராஜீகம் குறையின்றி நடக்கிறது"

"அரிசி, அளந்து கொடுக்கிற வழக்கம் ஒழிந்துபோய்விட்டதல்லவா!"

"அளவு, குறையப் போகிறது"

"என்னப்பா இது அநியாயம்! பழைய ராஜாதான், அரிசியை அளந்து தரச் சொல்கிறான் என்று சொன்னாய். இப்போது அரிசியின் அளவுமா குறைக்கிறார்கள். புது ராஜா வந்ததும், சுகம் இருக்கும் என்றாயே!"

"சொன்னேன்; சொன்னார்கள் அப்படி எல்லாம் நடக்குமென்று"

"அந்தக் கொள்ளை இலாபக்காரர்கள் கூண்டோடு ஒழிந்தார்களா!"

"ஒழிந்தார்களா என்று கேட்கிறாய்? ரொம்பக் குஷியாக வாழ்கிறார்கள்!"

"அடபாவமே! அவர்களையும் ஒழிக்கவில்லையா இன்னும்! போகட்டும், பாட்டாளிகளின் கூலி உயர்ந்ததா?"

கூலி உயரவில்லை! கூச்சல் அதிகமாகிவிட்டது"

"ஏனப்பா?"

"ஏன்? புது ராஜா வந்ததும், பழைய கஷ்டம் தீருமென்று நம்பினார்கள். நடக்கவில்லை, ஆகவே மனம் நொந்து கூச்சலிடுகிறார்கள், ஐயா! இது நியாயமா? என்று."

"நியாயமா ஐயா! என்று பாட்டாளி மக்கள் கூச்சலிட்டால், பழைய ராஜா, போலீசையல்லவா, அனுப்புவார், கும்பலைக் கலைத்து விட்டுவா, என்று. இப்போது புதிய ராஜா, அப்படிச் செய்யவில்லையே"

"இவரும் போலீசைத்தான் அனுப்புகிறார்"

"ஆனால் பாட்டாளியை அடிக்கச் சொல்லி இராது. பாடுபடுபவனை ஏமாற்றும் முதலாளியைத் தண்டிக்கச் சொல்லிப் புதிய ராஜா, போலீசை அனுப்புவார்!"

"ஐயா! இப்படிப்பேசி, என் கண்களைக் குளமாக்கவேண்டாம். இந்தப் புதிய ராஜா, பழைய ராஜா போலவே, கிளர்ச்சி செய்யும் பாட்டாளிகளை அடக்குவதற்காகவே போலீசை அனுப்புகிறார்"

"ஐயோ! நிஜமாகவா? எப்படியப்பா இதை நம்புவது? பழைய ராஜாதான் போலீஸ் தர்பார் செய்பவர் என்று சொன்னாய். இவருமா?",

"இவருந்தான்!"

"போலீசார், முன்பு நடந்து கொண்டது போலவா, கூட்டத்தைக் கலைக்க, தடியடி தருகிறார்கள்?"

"தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு, துப்பாக்கிப் பிரயோகம், சகலமும் நடக்கிறது"

"புது ராஜா காலத்தில்கூடவா? என்னப்பா அநியாயம்! தொழிலாளர்களைக் கைதுகூடச் செய்கிறார்களோ முன்பு இருந்த ராஜாங்கத்தார் செய்ததுபோல"

"ஆஹா! நடப்பது, நடந்துகொண்டுதான் இருக்கிறது. மதுரையில் பஸ் ஓட்டுபவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அங்கே அரெஸ்டு நடந்தது. சென்னையில், ஸ்பென்சர் கம்பெனியில் வேலை நிறுத்தம் நடக்கிறது ஏறக்குறைய ஒரு மாதகாலமாக — இங்கேயும், 75-தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்"

"என்ன கஷ்டகாலம்! அடடா! புது ராஜாங்கத்திலுமா இப்படி நடப்பது!"

"புது ராஜாங்கம், இரண்டு பெண் தொழிலாளிகளைக்கூடக் கைது செய்திருக்கிறது. வேலை நிறுத்தம் முறிவதற்காக, வேறு ஆட்களை, போலீஸ் பந்தோபஸ்திலே, ஸ்பென்சர் கம்பெனிக்குத் தருகிறது புது ராஜாங்கம்"

"புது ராஜாங்கம், வேலை நிறுத்தத்தின்போது முதலாளியுடன் கூடிக்கொண்டதா?"

"ஆமாம்"

"யாரப்பா அந்த ஸ்பென்சர் கம்பெனி முதலாளி, புது ராஜாவுக்குச் சொந்தக்காரரோ?"

"இல்லை! வெள்ளைக்காரன் கம்பெனி"

"வெள்ளைக்காரன் கம்பெனிக்கா புது ராஜாங்கம் இவ்வளவு உதவி செய்கிறது. ஏன்? தொழிலாளரின் கோரிக்கையின்படி நடந்துகொள்ளும்படி அந்த முதலாளியை வற்புறுத்தக்கூடாது?"

"மத்யஸ்தம் வைத்தது. வெள்ளைக்கார முதலாளி மத்யஸ்தர் கூறினதை ஏற்றுக்கொள்ளவில்லை"

"ஏற்றுக் கொள்ளாவிட்டால், ஏன் புது ராஜாங்கம், வற்புறுத்தக் கூடாது, அதிகாரமா இல்லை?"

"ஏன் அதிகாரம் இல்லை கம்பெனியை முதலாளியிடமிருந்து எடுத்துக்கொண்டு சர்க்காரே நடத்தும்படி சொல்லக்கூடத்தான் அதிகாரம் இருக்கிறது"

"இருந்தும், புது ராஜாங்கம், தொழிலாளரைக் கைது செய்வதும், வேலை நிறுத்தத்தைக் குலைக்கும் ஏற்பாட்டிலே முதலாளியுடன் ஒத்துழைப்பதுமாகவேதான் இருக்கிறது. என்னப்பா இது! இப்படிப்பட்ட காரியத்தைப் பழைய ராஜாங்கம் செய்துவந்தது, அதனாலே கஷ்டம் ஏற்பட்டது என்று மகுடாபிஷேகத்தன்று சொன்னாயே! இந்த ராஜாங்கமும்......................."

"ஐயா! என் வேதனையை அதிகப்படுத்தவேண்டாம்"

"அதுபோகட்டுமப்பா! சம்பளங்கள் உயர்ந்ததோ?"

"ஆமா! ஒன்றுக்கு மூன்றாக"

"சபாஷ்! இனி ஏழை உத்யோகஸ்தர்களின் கஷ்டம் ஒழியும்"

"ஐயா! சம்பள உயர்வு, யாருக்கு என்று எண்ணிக்கொண்டு பேசுகிறீர். உத்யோகஸ்தர்களுக்குமல்ல, பாட்டாளிகளுக்குமல்ல"

"வேறு யாருக்கு?"

"மந்திரிமார்களுக்கு!"

"மந்திரிகளுக்கா! இது என்னப்பா விசித்திரம். முன்பு இருந்த ராஜாங்கத்திலேதான் பணத்தாசையும் படாடோபத்திலே ஆசையும் கொண்டவர்கள் பதவிகளில் அமர்ந்துகொண்டு, பணமோ பணமோ என்று அலைந்தார்கள்—இப்போது புது ராஜாங்கத்திலே, ஏழை எளியோரிடம் இரக்கம் காட்டுபவர்கள் தானே இருக்கிறார்கள்..........."

"ஆமாம்! இவர்கள்தான் 500 க்குப்பதிலாக இனி 1500 வரை பெறுவார்கள். சம்பளம் உயரச் சட்டம் நிறைவேற்றிக்கொண்டார்கள்"

"ஏன்? என்ன காரணம் கூறினார்கள் இந்த உயர்வுக்கு"

"என்ன காரணம்! விலைவாசி உயர்ந்துவிட்டது, செலவு அதிகம்"

"இதுதான் பழைய ராஜாங்கத்தின் பல்லவியாச்சே!"

"அதுவேதான் இவர்களின் பல்லவியும், அவர்களிடம் கொஞ்சம் அழுத்தந்திருத்தமாக இவர்கள் அந்தப் பழைய பல்லவியைப் பாடுகிறார்கள்"

"இருக்கட்டுமப்பா, விலைவாசி ஏறிக் கஷ்டப்படுவது உண்மை. ஆனால் அந்தக் கஷ்டம் சாதாரண சர்க்கார் சிப்பந்திகள் சிறு தொழிலில் உள்ளவர்கள், பாட்டாளிகள் இவர்களைத்தானே அதிகம் பாதிக்கும். அவர்களின் கதி என்ன ஆவது?"

"பிறகு கவனிக்கப்படும் என்று, பிரதம மந்திரி பேசி இருக்கிறார்"

"என்னப்பா இது! பிறகு கவனிக்கப்படும், என்ற வாசகத்தைத் தானே பழைய ராஜாங்கம், எதற்கு எடுத்தாலும் சொல்கிற வழக்கம்"

"ஆமாம்! அதையேதான் இவர்களும் சொல்கிறார்கள்"

"என்னமோ அப்பா! எனக்கும் பிடிக்கவில்லை. போகட்டும், இந்தக் கிராம உத்யோகஸ்தர்கள் மிகமிகக் குறைந்த சம்பளம் பெறுகிறார்கள். கஷ்டம் தாங்காமல் முன்பு கிளர்ச்சி செய்தார்களே; அவர்கள் சம்பளம் உயர்ந்ததா!"

"இல்லை! பொறுத்திருங்கள். கவனிக்கிறோம் என்று மந்திரி சொல்லி விட்டார்"

(அடுத்த பக்கம் பார்க்க)




உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 9-அங்குலம் வேஷ்டிகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-செ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34. பஞ்சவர்ணஸ்வாமி கோவில் தெரு,
உறையூர் P. O. திருச்சி.

## நடந்ததுதான் நடக்கிறது!

5-ம் பக்கத் தொடர்ச்சி

"இதுவும் புதியபேச்சு அல்லவே அப்பா. பழைய ராஜாங்க பாஷை தானே"

"ஆமாம்! ராஜா புதிதாக வந்தாரே தவிர, பாஷை பழைய பாஷையாகவேதான் இருக்கிறது"

"அட கஷ்டகாலமே! நீ என்னமோ மகுடாபிஷேகத்தன்று, புது ராஜா காலத்திலே சந்தோஷம் கரைபுரண்டு ஓடும் என்றாயே! போகட்டும், இந்தப் பள்ளிக்கூட வாத்தியார்கள் சம்பள விஷயம் என்னவாயிற்று?"

"மந்திரி, அவர்களின் சம்பளம் உயர்த்தப் படவேண்டியதுதான், வாத்தியார்கள் விஷயத்திலே அன்பு காட்டவேண்டியதுதான் அவர்கள்படும் கஷ்டம் போக்கப்படத்தான்வேண்டும், என்று பேசினார்"

"பரவாயில்லையே! இது ஒரு சந்தோஷமானசெய்தி. சரி! சம்பளம் உயர்த்தி விட்டாரா?"

"இல்லை!"

"ஏன்?"

"பணம் இல்லை! கல்விஇலாக்காவுக்குக் கலால் இலாகா பணம் தான்வரும்; கலால் வருமானம் மதுவிலக்கால் குறைந்துவிடக்கூடும். இந்தக் கஷ்டத்தைச் சமாளிக்க வேண்டும்என்று மந்திரிகூறிவிட்டார்"

"அட இழவே! இது பழைய ராஜாங்கத்திலே ஒவ்வொரு அதிகாரியும் சொன்னதுதானே. இதையேவா, புது ராஜாங்கமும் சொல்கிறது. ஒழியட்டும், மதுவிலக்காவது வந்துவிட்டதோ?"

"வரப்போகிறது நாலு ஜில்லாவுக்கு என்று மந்திரி பேசி இருக்கிறார்"

"புது என்னப்பா நாலு ஜில்லாவுக்கு? அதைப்போலத் துண்டு துண்டாக மதுவிலக்கு செய்தால் பலன் இல்லை, மாகாணம் பூராவுக்கும் மதுவிலக்குச்செய்ய வேண்டும் என்றுதானே முன்பெல்லாம் சொன்னோம்"

"ஆமாம்! ஆனால் அப்படி மாகாணம் முழுவதும் ஒரே அடியாக மதுவிலக்குச்செய்தால், சர்க்கார் வருமானம் குறைந்து, வரவுசெலவு சரிக்கட்ட முடியாத நிலைமை ஏற்படும் என்று மந்திரி சொன்னார்"

"போப்பா! நல்ல மந்திரி, நல்ல ராஜரீகம். இதையேதானே முன்பு இருந்த ராஜாங்கத்திலே எந்த அதிகாரியும் சொன்னான். அதையே இவர்களும் சொல்லுவது என்றால், என்னபிரயோஜனம். இப்படி ஒவ்வொன்றுக்கும்பழைய பேச்சையே பேசுவது என்றால் இதற்குப் புதிதாக இவர்கள் வருவானேன்? என்னதான் செய்தார்கள் இவர்கள் ராஜரீகம் ஏற்று?"

"ராஜாங்கம் நடத்துகிறார்கள்!"

"அத்தானா! அவ்வளவுதானா!! இருக்கும் கஷ்டம் போகக்காணோம், பழைய முறை மாறக்காணோம், பாட்டாளி துயர் குறையக்காணோம், அமுல்ஓடக்காணோம், புதுராஜாங்கம் வந்தால், ஆனந்தம் பொங்கும் என்று அன்றுகூத்தாடினாயே"

"ஆடினதால் வந்த அலுப்புத் தானப்பா, கண்டபலன்"

"செச்சே! எனக்குக் கோபமாகவும் இருக்கிறது வெட்கமாகவும் இருக்கிறது. நான் போய்விட்டு இன்னும் கொஞ்ச நாள் பொறுத்தாவது வருகிறேன்; அப்போதாவது புதுராஜாங்கம் புதிய முறையில் வேலைசெய்து, பழையகஷ்டத்தைப்போக்கி, புதிய, இன்பமான வாழ்வை மக்களுக்குத் தருகிறதா என்றுபார்ப்போம்."

---

## ரங்கோன் ராதா

2-ம் பக்கத் தொடர்ச்சி

பிரித்துவிட அவள் செய்த சூது அது, என்பதை யார் தெரிந்துகொண்டார்கள்! நான் சொன்னால் யார் நம்புவார்கள்! நான் தான் பெண்ணல்லவே! பேய்!!

இரகசியமாகப்பேசுவதுபோய், என்காதில் படும்படியாகவே பேசலாயினர். ஜாதகப்பொருத்தம்கேட்கப்பட்டது. ஜோதிடர், உன், அப்பாவின் தயவில்வாழ்பவர். பொருத்தம்சரியாக இல்லை என்றுகூறமுடியுமா அவரால்! என்னைமூன்றுபேய்களிடம் ஒப்படைத்துவிட்டு, உன் அப்பா தங்கத்திடம் தன்னை ஒப்படைத்து விடத்தீர்மானித்துவிட்டார்.

எது நேரிடுமென்று பயந்துவந்தேனோ, அது நடப்பது உறுதியென்று ஏற்பட்ட உடனே, நான், ஒருவிதமான அமைதிபெற்றேன். இனி நம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை; தங்கம் வெற்றிபெற்றுவிட்டாள்; இனியும் நாம் இதுவிஷயமாகச்சிந்தித்துச்சிதையவேண்டியதில்லை, என்று மனதை ஒருவாறு, திருப்திப்படுத்திக்கொண்டேன்! ஒருநாள், பூஜாரி இல்லாத சமயமாகப்பார்த்து, நான் உன் அப்பாவை என் அருகே வருமாறு அழைத்தேன். கைகால்கள் கட்டப்பட்டே இருந்தன. அவர் அருகே வந்தார். என்கண்களில் நீர்தாரை தாரையாக வந்தது. அவர் என்பக்கத்தில் உட்கார்ந்தார். அவர் மனமும் கொஞ்சம் இளகியதுபோல் தெரிந்தது. அவருடைய முகத்தை நான் இமைகொட்டாமல்கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, "தங்கம்ஜெயித்துவிட்டாள். இனிநான், உங்கள் கலியாணத்தைத்தடுக்கப்போவதில்லை, என்ன இருந்தாலும் அவள் என் தங்கை தானே. அவள் சுகப்படட்டும். நான் இனி அவ்விஷயமாகத்தலையிடமாட்டேன். வீணாக, வேதனைப்பட்டேன். விபரீதமானபழி ஏற்பட்டது எனக்கு. உங்களுக்கே தெரியும் எனக்குப்பேயும் இல்லை, பிசாசும் இல்லை, எல்லாம் மனக்குழப்பந்தான் காரணம் என்பது" என்று சொன்னேன். எப்படியோ அந்தசமயம், அவருடைய மனம் இளகிற்று. "வருத்தப்படாதே ரங்கம்" என்று தேற்றினார். என்கட்டுகளை அவிழ்த்தார்; கண்களைத்துடைத்தார்; மறக்குறைய இரண்டு வருஷங்களாக என்னை அவர் அன்புடன் நடத்தியதில்லை. அன்று அவர் என்னிடம் மிக அன்பாகநடந்துகொண்டார். புதுமணத் தம்பதிகள்போலவே நாங்கள் நடந்துகொண்டோம். இரண்டு வருஷக்கவலையையும் மறந்தேன்; களித்தேன்; என் நாதனைமீண்டும் பெற்றேன். விடிய விடியடபேசிக்கொண்டிருந்தோம். விபூதித்தட்டும், வேப்பிலைக்கொத்தும்சிந்துவாரற்றுக்கூடத்திலேகிடந்தன, நாங்கள் படுக்கை அறையில் பலகாலமாகப்பேசமறந்த விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தோம். கடைசியில் அவர், "ரங்கம்! உன் அப்பாவின் மிட்டா, இனி எனக்குத்தான். தங்கத்தை வேறு எவனாவது கலியாணம் செய்துகொண்டால் பாதிமிட்டா பறபோகும். இப்போது ரங்கமும் தங்கமும் எனக்கு! மிட்டாவும் எனக்கு" என்றார், வெற்றிச் சிரிப்புடன். "நமக்கு" என்றுகூடச் சொல்லக்கூடாதா?" என்று நான் கேட்டேன். "சந்தேகம் என்ன! நமக்குத்தான்! நான்மிட்டாதாரன் என்றால் உனக்குத்தானே பெருமை" என்றார். பொழுதுபுலர்ந்தது, என் வாழ்விலும் ஒருபுதுமலர்ச்சி பிறந்தது என்று நினைத்தேன். அன்று பலரும்வந்து என்னைப் பாராட்டினார்கள், பேய் நீங்கிவிட்டதென்று. மாலையில் பேய் மீண்டும் என்னைப் பிடித்துக்கொண்டது' (தொடரும்)

---

தந்தி:- "புறுமார்க்" திருச்சி.




## மதிப்புரை

## "அருணோதயம்"

பொருள்:— கவிதைகள்.
ஆக்கியோன்:— கம்பதாசன்.
வெளியிடுவோர்,— புதுமலர் நிலையம் கோவை.
விலை இரண்டு ரூபாய்.

●

### நமது கருத்து

கவிதைகள் இன்று, இலக்கண உலைக்கூடத்து உருக்குப்பொருள் என்ற நிலையிலிருந்து மாறி கடைவீதியில் உலவும் மக்களின் மனதுக்கு மகிழ்ச்சியும் எழுச்சியும் தரும் கருவியாகிவிட்டன. பாராட்டுக்குரிய மாறுதல். பெரும் பண்டிதர்கள்மட்டுமேபடித்து இரசித்திடும்போக்கு ஒழிந்து, பாமரர் என்று ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த பெரும்பான்மையானமக்கள், நேருக்கு நேராகக் காணக்கூடிய விஷயங்களை விளக்கும் போக்கு ஏற்பட்டிருக்கிறது. அன்றில்பறவையின் காதலும், அன்னத்தின் தூதும், அசோகவனத்துச்சோகமும், முன்பு கவிதைகள். இன்று, அறுவடை, நெல்லுக்குத்து, எழுத்தாளன், நடிகன், பிச்சைக்காரர், படகோட்டி, கிழவி ரிக்ஷாகாரன், ஓட்டர், கூடை பின்னுபவன் இவை கவிதைகளாகமலர்ந்துள்ளன. "கம்பதாசன்' —பெயரில்மட்டுந்தான் — ஆனால் உண்மையிலே, பாரதிதாசன் நேசன். பாரதிதாசனின் கவிதை உள்ளம் தேடித் தேடிச்சென்று, சமுகத்திலே இதுவரை மூலைப்புறத்தே தள்ளி வைக்கப்பட்டிருந்த 'பிரச்னைகளை'' மன்றத்துக்கு இழுத்துவந்து மக்கள் முன்வைப்பது போலவே, இவரும், இனிய எளியதமிழில் அருணோதயம் என்ற கவிதைக்கொத்திலே பல பிரச்னைகளை விளக்கிப்பாடியுள்ளார். நடை அழகுடன் கனிவும் கலந்திருக்கிறது, எழுச்சியும், எழிலும் தழுவிக்கொண்டுள்ளன, கம்பதாசனின் கவிதைகளில். உவமைகளுக்காக, கம்பதாசன் பழைய ஏடுகளைத்தேடிடும் பான்மையை மற்றவர்கள்போல் கொள்ளாமல் புத்தம் புதியதாக, ஆனால் நம் போன்ற சாதாரணமக்களுக்குப் புரியக் கூடியதான முறையிலே, உவமைகளைக் காட்டுகிறார். அழகியமுறையிலே, ஆழ்ந்த கருத்துகளைத்தீட்டுகிறார்.

கோவை 'புதுமலர்நிலைய'த்தார், கவி கம்பதாசனின் சொற்சித்திரங்கள் பலவற்றைத் திரட்டி, "அருணோதயம்" என்ற தலைப்பிலே, அழகிய வடிவிலே வெளியிட்டுள்ளனர். கண்கவரும் முகப்புப்படத்துடன், 136பக்கங்கள்கொண்ட புத்தகம், அருணோதயம். விலை 2 ரூபாய். கிடைக்குமிடம், காசிநாத் கம்பெனி, பெரியகடைவீதி, கோவை.


கம்பதாசன் சிறந்த தமிழ்ப்பற்றுள்ளவர். தமிழின்பழைமை, பெருமை, இனிமை ஆகியவற்றை உணர்ந்திருப்பதுடன், அத்தகைய சிறந்த மொழியையும் இனபேதம் காரணமாகச்சிலர்பழிக்கவும் செய்கிறார்கள், என்பது அறிந்து, என் தமிழையும் இழிவாகட பேசுபவர் உளரே! என்று கொதித்தெழுந்து, கூறுகிறார்!

"தமிழென்றால் அமுதத்தின் ஊற்று
தமிழ்
தன்னைப்பழித்திடில் தமிழ்புயற்
காற்று"

என்று.

அத்தகைய ஊற்றும், காற்றும், "அருணோதயம்" தாங்கிவருகிறது. நமது இதழில்முதல்பக்கத்தில், "தமிழ்"என்ற கம்பதாசனின் கவிதையை வெளியிட்டிருக்கிறோம், "அருணோதயம்" தரும், கவிதையின் சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டாக. அன்பர்கள் அருணோதயம்'பெற்று அகமகிழ்வார்கள் என்று நம்புகிறோம்.

★




"சாப்பாட்டு விடுதிகளில் ஜாதிபேதம் ஒழிய வேண்டும்" மந்திரி கூர்மையா.

Edited Printed and Published by C. N. Annadurai. M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.